இந்திய தேசிய காங்கிரஸ் - தமிழ்நாடு

# தமிழ்நாட்டை முன்னேற்றுவோம்

## சட்டமன்றத் தேர்தல் அறிக்கை – 2026

10 பிரிவுகள் • 50 விரிவான வாக்குறுதிகள் • தரவு சார்ந்த நிர்வாகம்

ஜெய் ஹிந்த் • வந்தே மாதரம் • வணக்கம் தமிழ்நாடு

வெளியீடு : தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு
சத்தியமூர்த்தி பவன், சென்னை

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் அறிக்கை - கண்ணோட்டம்

10 பிரிவுகள் • 50 வாக்குறுதிகள் • தமிழ்நாடு 2026 தேர்தல்


| | |
|---|---|
| 01 | அனைவருக்குமான வளர்ச்சி |
| 02 | கல்வி மற்றும் இளைஞர் முன்னேற்றம் |
| 03 | சுகாதார பராமரிப்பு மற்றும் பொது சுகாதாரம் |
| 04 | விவசாயம் மற்றும் கிராமப்புற செழிப்பு |
| 05 | வேலைகள், திறன்கள் மற்றும் தொழில் முனைவு |
| 06 | பெண்கள் மற்றும் சிறுபான்மையினர், எஸ்சி / எஸ்டி மேம்பாடு |
| 07 | நகர்ப்புற மேம்பாடு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் |
| 08 | போக்குவரத்து, எளிதான விரைவான நகர்வு மற்றும் சரக்குப் போக்குவரத்து |
| 09 | சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி |
| 10 | சுற்றுச்சூழல், எரிசக்தி மற்றும் சுற்றுலா |




01

# அனைவருக்குமான வளர்ச்சி

பிரிவு 01 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026

# 01. அனைவருக்குமான வளர்ச்சி

அம்சங்கள் 1 & 2: அனைவருக்கும் அடிப்படை வருவாய் + நிலமற்ற விவசாயிகளுக்கு ஆதரவு

### அம்சம் 1 – அனைவருக்கும் அடிப்படை வருவாய்

**குடும்ப அட்டைதாரர் அனைவருக்கும் மாதம் ரூ. 2,000 அடிப்படை வருவாய்**

- அனைத்துக் குடும்ப அட்டைதாரருக்கும் மகளிர் கணக்கிற்கு நேரடிப் பணப் பரிமாற்றம்
- பணவீக்க விகிதாசார குறியீட்டுடன் இணைக்கப்பட்டது — ஆண்டுதோறும் தானாகவே மாற்றம்செய்யப்படும்
- இது தற்போதுள்ள நலத்திட்டங்களுக்கும் கூடுதலாக, மாற்றாக அல்ல

**குடும்பங்களுக்கான பயன்**

மாதத்திற்கு ரூ. 2,000 ரொக்கம்
நேரடியாகப் பெண்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

### அம்சம் 2 – நிலமற்ற விவசாயிகளுக்கு ஆதரவு

**ஆண்டுக்கு ரூ. 6,000**
**பிஎம் கிசான் திட்டத்திலிருந்து விலக்கப்பட்ட நிலமற்ற விவசாயிகளுக்குத் தரப்படும்**

**தகுதிக்கான நிபந்தனைகள்**

- பட்டா/வருவாய்ப் பதிவேடுகளில் நில உரிமை இல்லாதிருத்தல்
- அரசு பட்டியலில் உள்ள விவசாயம் சார்ந்த தொழில்கள்

**செயல்படுத்துதல்**

- 'தமிழ்நாடு நிலமற்ற விவசாயிகள் பதிவேட்டை உருவாக்குதல்
- சுய அறிவிப்பு + உள்ளூர் சரிபார்ப்பு + திடீர் தணிக்கைகள்
- ஆண்டுக்கு 3 தவணைகளில் நேரடியாக வங்கிப் பரிவர்த்தனை

**பயன்: மத்திய திட்டத்திலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கு சமமான ஆதரவு**



# 01. அனைவருக்குமான வளர்ச்சி மற்றும் நலத்திட்டம்

அம்சங்கள் 3, 4 & 5: பொதுவிநியோக முறை சீர்திருத்தம் • முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதிய உயர்வு • ஒருங்கிணைந்த நலத்திட்ட லலைதளம்

### அம்சம் 3–தரமான பொது விநியோகம்

- **சிறந்த தரம் • முறைகேடின்மை**
- **கண்ணியமான விநியோகம்.**

- முதல்தர அரிசி மட்டுமே வழங்கப்படும் - கட்டாய தர அமலாக்கம் + மாதாந்தர சோதனைகள்
- அனைத்து 31,000+ நியாயவிலைக் கடைகளும் புதுப்பிக்கப்படும்: தூய்மை, நல்ல வெளிச்சம், கண்ணியமான சேவை
- விநியோக பயனானர்கள் பெற்றுக் கொள்ளும் தேதியைத் தேர்ந்தெடுங்கள்; முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி களுக்கு வீட்டு வாசலிலேயே விநியோகம்.

### அம்சம் 4—மாதம் ரூ. 2,000 – முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம்

**முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி களுக்கான ஓய்வூதியம்**

- தற்போதுள்ள விகிதங்களிலிருந்து அதிகரிக்கப்பட்டது
- நேரடிப் பயன் பரிமாற்றம் - இடைத்தரகர் இல்லை
- பதிவுசெய்யப்பட்ட அனைத்து முதியோரையும் உள்ளடக்கியது
- நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்க அடிப்படையில் தொடர்ச்சியாகத் திருத்தியமைக்கப்படும்

**தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முதியோருக்கும் கண்ணியமான வாழ்க்கை**

### அம்சம் 5–ஒருங்கிணைந்த நலத்திட்ட வலைதளம்

**ஒரே வலைதளம் • அனைத்து நலத் திட்டங்களும் 200 + திட்டங்கள் → ஒரே தளம்**

**தற்போதைய பிரச்சனைகள்**

- சிக்கலான நடைமுறை: பல படிவங்கள் மற்றும் அலுவலகங்கள்
- தகுதியுள்ள குடிமக்களிடையே விழிப்புணர்வு இல்லாமை
- ஏமாற்றுதல்—ஒரே பயனாளி பல திட்டங் களில் இருப்பது, மற்றவர்கள் விடுபடல்

**அதற்கான தீர்வு**

- ஒரே 'தமிழ்நாடு நலத்திட்ட செயலி'—அனைத்துத் திட்டங்களும் ஒரே சமூகதளம் பரிமாற்றம்.
- ஒருங்கிணைந்த தரவுத்தளம்: ஆதார் + குடும்ப அட்டை + வருமானம் இணைப்பு
- அனுமான ஒப்புதல்:90நாட்களுக்குள்பதில் வராவிட்டால், திட்டங்கள் தானாகவே அங்கீகரிக்கப்படும்

# கல்வி மற்றும் இளைஞர் மேம்பாடு

பிரிவு 02 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026



# 02. கல்வி மற்றும் இளைஞர் முன்னேற்றம்

அம்சங்கள் 1 & 2: போட்டித் தேர்வுப் பயிற்சி • செயற்கை நுண்ணறிவு (AI) திறன்மிகு வகுப்பறைகள்

## அம்சம் 1–தரமான போட்டித்தேர்வுப் பயிற்சி மற்றும் நீட் ஒதுக்கீடு வரைமுறை

### ஒவ்வொரு மாவட்டத்திலும் தரமான பயிற்சி

- குறைந்த வருவாய் குடும்ப மாணவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டணமின்றி தரமான பயிற்சி மையங்கள்
- நேரடி மற்றும் இணையவழி முறையில் : நேரடி வகுப்புகள் + இணையவழி உள்ளடக்கம் + தேர்வுத் தொடர்
- சிறந்த தனியார் பயிற்சி நிறுவனங்களை அணுக சான்றுச்சீட்டு முறை
- தற்போதைய 7.5% (அரசுப் பள்ளிகளுக்கு மட்டும்) ஒதுக்கீட்டை முழுமையாக 10% ஆக உயர்த்துதல்
- அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு 2.5% கூடுதல் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

### யார் பயனடைவார்கள்

- டிஎன்பிஎஸ்சி / யுபிஎஸ்சி அல்லது அனைத்து அரசுத் தேர்வு ஆர்வலர்கள்
- மருத்துவம் மற்றும் பொறியியல் நுழைவுத் தேர்வுக்குத் தயாராவோர்
- வங்கி மற்றும் ரயில்வே தேர்வுப் பயிற்சி
- தமிழ்நாட்டின் கிராமப்புறங்களிலிருந்து படிக்கும் முதல் தலைமுறையினர்

## அம்சம் 2—AI திறனறி வகுப்பறைகள் + ஆசிரியர் பயிற்சி

### செயற்கை நுண்ணறிவு வழி கற்றல் + திறமையான ஆசிரியர்கள்

- அரசுப் பள்ளிகள் அனைத்திலும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கற்றல் திறன் கருவிகள்
- கவனம் செலுத்தப்படும் பிரிவுகள்: கணிதம், அறிவியல் மற்றும் மொழி மேம்பாடு

### ஆசிரியர் திறன் கட்டமைப்பு

- அரசு ஆசிரியர்கள் அனைவருக்கும் கட்டாய டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி
- மாவட்ட அளவில் ஆசிரியர் பயிற்சி மையங்கள் நிறுவப்படும்
- இணையதளங்கள் மற்றும் பயிலரங்குகள் மூலம் தொடர்ச்சியான திறன் மேம்பாடு

**கற்பித்தல் தரத்தை தொழில்நுட்பம் மேம்படுத்துகிறது — அது ஆசிரியர்களுக்கு மாற்றானது அல்ல**

# 02. கல்வி மற்றும் இளைஞர் முன்னேற்றம்

அம்சங்கள் 3, 4 & 5: டியூஷன் அக்கா • தங்கிப் பயிலும் பள்ளிகள் • பாடத்திட்ட சீர்திருத்தம்

### அம்சம் 3 – டியூஷன் அக்கா திட்டம்

"டியூஷன் அக்கா"
பள்ளிக்குப் பிறகான கல்விசார் ஆதரவு

- பள்ளிக்குப் பிறகான தனிப்பயிற்சிக்கு, படித்த உள்ளூர்ப் பெண்களைப் பணியமர்த்துதல்
- சிறப்புப் பார்வை: கற்றல் இடைவெளிகளைக்கொண்ட அரசுப் பள்ளி மாணவர்கள்
- அடிப்படைக் கற்றல் தரவுகளை மேம்படுத்துகிறது
- படித்த உள்ளூர் பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகிறது

### அம்சம் 4 – தனிச் சிறப்பு தங்கிப் பயிலும் பள்ளிகள்

6 மண்டல தனிச்சிறப்புப் பள்ளிகள்

தமிழ்நாடு முழுவதும்
தகுதி அடிப்படையிலான சேர்க்கை

முக்கிய அம்சங்கள்

- இருமொழிக் கொள்கை
- வலுவான தமிழ் அடித்தளத்துடன் ஆங்கில வழிக் கல்வி
- உயர்தரமான கற்பித்தல் + போட்டித் தேர்வுக்கான கற்பித்தல்
- நவீன உள்கட்டமைப்பு மற்றும் களப் பயணங்கள்
- அனைத்து விதமான பின்னணி யிலிருந்து வரும் திறமையாளர் களுக்கு உலகத் தரத்திலான எதிர்காலம்

### அம்சம் 5 – பாடத்திட்ட சீர்திருத்தம்

21 ஆம் நூற்றாண்டு பாடத்திட்டம்

மேற்கொள்ளப்படும் மாற்றங்கள்

- திறனாய்வுச் சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் தொகுப்புகள்
- அனைத்து அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளிலும் விளையாட்டு மைதானம் கட்டாயம் இருக்கவேண்டும்
- அனைத்துப் பள்ளிகளிலும் தகுதி வாய்ந்த விளையாட்டு பயிற்சி ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பள்ளியின் திட்டத்திலும் விளையாட்டு பயிற்சி ஆசிரியர் மற்றும் விளையாட்டு சம்பந்தமான பாடம் கட்டாயமாக இருக்க வேண்டும்.
- அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படை இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.



03

# சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பொது சுகாதாரம்

பிரிவு 03 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026

# 03. சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பொது சுகாதாரம்

அம்சங்கள் 1, 2 & 3: சுகாதாரக் காப்பீடு • மனநல இயக்கம் • ஆஷா பணியாளர்கள்

### அம்சம் 1 – அனைவருக்கும் சுகாதாரக் காப்பீடு

விரிவாக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பட்டியலிடப்படும்

பாதுகாப்பு வரம்பு

- எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் அனைத்து நோய்களுக்கும்
- முன்னுரிமை: குறைந்த வருவாய் உள்ள மற்றும் பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு

**நோக்கம்:**
**மருத்துவச் செலவுகள் காரணமாக எந்தக் குடும்பமும் வறுமையில் வீழ்ந்துவிடக் கூடாது.**

### அம்சம் 2 – மனநல இயக்கம்

அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் மனநல பராமரிப்பு

- 38 மாவட்டங்களிலும் மனநல மருத்துவ நிலையங்களை நிறுவுதல்
- அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் கட்டணமின்றி மனநல ஆலோசனை சேவைகள்
- பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்களுடன் 24×7 மனநல உதவி
- பள்ளி மற்றும் கல்லூரிகளில் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- சமூகப் பிரச்சாரங்கள் மூலம் தவறான புரிதல்களைப் போக்குதல்
- மனநலனில் முதலுதவி செய்ய 10,000-க்கும் அதிகமான சமூக சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

### அம்சம் 3 – முன்னணி சுகாதாரப் பணியாளர் சீர்திருத்தம்

ஆஷா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களை வலுப்படுத்துதல்

சீர்திருத்தம்

- ஆஷா பணியாளர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்களின் எழுத்து வேலைகளைக் குறைத்தல்
- பதிவேடுகள் மற்றும் அறிக்கை முறைகளை டிஜிட்டல் மயமாக்குதல்
- மொபைல் அடிப்படையில் எளிதான தரவு உள்ளீட்டுக் கருவிகள்
- ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிர்வாக உதவிப் பணியாளர்களைப் பணியமர்த்துதல்

**பணியாளர்கள் கூடுதல் கவனம் செலுத்துபவை:**

- நோயாளி பராமரிப்பு
- கள சுகாதாரப் பணி
- சமூகத் தொடர்பு



# 03. சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பொது சுகாதாரம்

அம்சங்கள் 4 & 5: ரேபிஸ் நோய் இல்லாத தமிழ்நாடு இயக்கம் • ஆரம்ப சுகாதார மைய வலையமைப்பை பலப்படுத்துதல்

### அம்சம் 4–ரேபிஸ் நோய் இல்லாத தமிழ்நாடு இயக்கம்

இலக்கு: 2030-க்குள் ரேபிஸ் நோயால் மரணங்களே ஏற்படாமல் செய்வது

| பிரச்சனை | தீர்வு |
| --- | --- |
| ஆண்டுக்கு சுமார் ~5 லட்சம் நாய்க்கடி சம்பவங்கள் | 100% தெருநாய்களுக்குத் தடுப்பூசி (ஆண்டுதோறும்) 70%+ கருத்தடை பாதுகாப்பு |
| வெறிநாய்க்கடியால் ஆண்டுக்கு சுமார் ~30-40 ரேபிஸ் நோய் மரணங்கள் (100% தடுக்கக்கூடியது) ~ 25-30% மட்டுமே கருத்தடை உள்ளது. குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் | நகர்ப்புற விலங்கு மேலாண்மை அலகுகள் கடுமையான கழிவு மேலாண்மை<br>அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வெறிநாய்க் கடிக்குக் கட்டணமில்லா தடுப்பூசிகள் கால்நடை மருத்துவர் கிடைப்பதை அதிகரித்தல் |

இது ஏன் முக்கியம்

**ரேபிஸ் நோய் அறிகுறிகள் தோன்றியவுடன் 100% மரணத்தை விளைவிக்கும் • மருத்துவமனைகளில் அதிக பணிச்சுமை • குடும்பங்கள் சிகிச்சைச் செலவுகளையும் வருவாய் இழப்பையும் சந்திக்கின்றன • முற்றிலும் தடுக்கக்கூடிய ஒரு நோயை இந்த இயக்கம் தமிழ்நாட்டிலிருந்து ஒழிக்கும்**

### அம்சம் 5 – ஆரம்ப சுகாதார மைய வலையமைப்பை பலப்படுத்துதல்

கடைக்கோடி பகுதியிலும் சுகாதாரப் பராமரிப்பு

- அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களையும் போதுமான பணியாளர்களுடன் வலுப்படுத்துதல்
- அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் அத்தியாவசிய மருந்துகள் 24 மணி நேரமும் கிடைப்பதை உறுதி செய்தல்
- தொலைதூர மற்றும் பழங்குடியினர் பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவப் பிரிவுகள்
- ஆரம்ப சுகாதார மையங்கள் முதல் சிறப்பு மருத்துவர்கள் வரை தொலைமருத்துவ சேவைகள்
- மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களில் தொடர்ச்சியான செயல்திறன் தணிக்கை

**தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் 5 கி.மீ. தொலைவிற்குள் தரமான ஆரம்ப சுகாதார நிலையம்**

# விவசாயம் மற்றும் கிராமப்புற செழிப்பு

பிரிவு 04 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026



# 04. விவசாயம் மற்றும் கிராமப்புற செழிப்பு

அம்சங்கள் 1, 2 & 3: பயிர்க்காப்பீடு • துல்லியமான விவசாயம் • குளிர்பதனக் கிடங்கு

### அம்சம் 1–பயிர்க் காப்பீடு சீர்திருத்தம்

**விரைவான, நியாயமான பயிர்க் காப்பீடு**

- தாமதங்களையும் உரிமைகோரல் நிராகரிப்புகளையும் குறைக்க பயிர்க் காப்பீட்டை மறுவடிவமைப்பு செய்தல்
- விரைவான தீர்வுக்காக செயற்கைக்கோள் தரவு மற்றும் டிஜிட்டல் முறை சரிபார்ப்பு
- விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக, குறிப்பிட்ட காலத்திற்குள் பணம் செலுத்துதல்
- காப்பீட்டு நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் மூன்றாம் தரப்பு தணிக்கை

**பயன்: பயிர்கள் சேதமடையும்போது நம்பகமான நிதிப் பாதுகாப்பு — காத்திருப்பு இல்லை, உண்மையான உரிமை கோரல்களுக்கு நிராகரிப்பு இல்லை**

### அம்சம் 2–துல்லியமான விவசாயம் மற்றும் டிஜிட்டல் ஆலோசனை

**திறன்மிகு விவசாய ஆலோசனை**

- டிஜிட்டல் தளங்கள் வழியாக உடனுக்குடன் பயிர் சார்ந்த ஆலோசனை
- வானிலை அடிப்படையிலான வழிகாட்டுதல் மற்றும் பூச்சி / நோய் எச்சரிக்கைகள்
- சேவைகள் வழங்க, வேளாண் தொழில்நுட்பத் தொழில்முனைவோர் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களுக்கு அதிகாரமளித்தல்
- அறிவு சார்ந்த அமைப்புகளுடன் பங்குதாரராகுதல்

**பயன்: அதிக உற்பத்தித்திறன் + குறைந்த இடுபொருள் செலவுகள்**

### அம்சம் 3 – குளிர்பதனக் கிடங்கு மற்றும் அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு

**அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைத்தல்**

- அனைத்து மாவட்டங்களிலும் குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் சேமிப்புக் கிடங்கு வலையமைப்புகளை விரிவுபடுத்துதல்
- விவசாயக் குழுக்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளுக்குத் தனியான சேமிப்புக் கிடங்குகளுடன் உதவி செய்தல்
- அழுகும் தன்மையுள்ள விளைபொருட்களுக்குக் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து வசதிகள்
- மாவட்ட அளவில் தரம் பிரித்தல் மற்றும் பேக்கேஜிங் மையங்கள்
- அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை ~25% என்பதிலிருந்து 8% என்பதற்கும் கீழே குறைத்தல்

## அம்சம் 4 – பழங்கள் மற்றும் காய்கறிகளை சந்தைப்படுத்தும் வாரியம்

**விவசாய பொருள்களுக்கு சந்தைப்படுத்தும் வாரியம் — விவசாயிகளுக்கு நியாயமான விலை**

- பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கென தனி வாரியத்தை நிறுவுதல்
- வெளிப்படையான சந்தை இணைப்புகள் மூலம் சிறந்த விலையைக் கண்டறிதல்
- வேளாண் குழுக்களுக்கு உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை இணைப்புகள்
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்: சந்தைப் போக்குகள், விலை நிர்ணயம், நேரடி விற்பனை
- இணையவழி விலை கண்டறிதலுக்காக இ-நாம் (e-NAM) ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல்

**விவசாயிகள் தற்போது நுகர்வோர் விலையில் 20 - 30 சதவீதம் வரை மட்டுமே பெறுகின்றனர். இந்த வாரியம் இடைத்தரகர்களை நீக்கி, நேரடியாக சந்தைக்கு செல்வதை சாத்தியமாக்குவதன் மூலம், விளைநிலம் அருகிலேயே 50 சதவீதத்திற்கும் அதிகமான விலையை உறுதி செய்யும்.**

## அம்சம் 5 – நீர்ப்பாசனம் மற்றும் நீர்நிலைகள் புனரமைப்பு

**பாசனத்தை மீட்டெடுத்து நவீனமாக்குதல்**

- பாசனக் கால்வாய்களை மீட்டெடுத்து நவீனமாக்குதல் (எடுத்துக்காட்டு நந்தன் கால்வாய்)
- குளங்கள் மற்றும் உள்ளூர் நீர்நிலைகளில் வண்டல் மண்ணை அகற்றிப் புனரமைத்தல்
- சிறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன மானியங்கள்
- தடுப்பணைகள் மூலம் நிலத்தடி நீரை அதிகரித்தல்
- மேம்பட்ட நீர் இருப்பு → அதிகரித்த வேளாண் உற்பத்தித்திறன்



05

# வேலைகள், திறன்கள் மற்றும் தொழில்முனைவு

பிரிவு 05 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026

# 05. வேலைகள், திறன்கள் மற்றும் தொழில் முனைவு

அம்சம் 1: 300 நாட்களில் அரசின் காலிப்பணியிடங்களை நிரப்புதல்

## செயல் வடிவ முறை

300 நாள் ஆட்சேர்ப்பு முகாம்

- 60 நாட்களுக்குள் துறை வாரியான காலிப்பணியிடப் பட்டியலை வெளியிடுதல்
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், துறைப் பதிவேடுகள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத் தரவுத்தளம் ஆகியவற்றின் தரவுகளைப் பயன்படுத்துதல்
- பொதுமக்கள் பார்வையிடும் வகையில், வெளிப்படையான ஆட்சேர்ப்பு கால அட்டவணையை உருவாக்குதல்
- தமிழ்நாடு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ~70–90 லட்சம் இளைஞர்கள் பதிவு செய்துள்ளனர்

**மொத்தம் மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்கள்**

**~2.5 முதல் 3.5 லட்சம் வரை**

**அனைத்துத் துறைகளிலும் காலிப்பணியிடங்கள்**

## துறை வாரியாக காலிப்பணியிட விவரம்

| துறை | காலி பணியிடங்கள் | தகுதி |
|---|---|---|
| கல்வி : | 60,000–80,000 | ஆசிரியர்கள், உயர்கல்வி ஊழியர்கள் |
| காவல்துறை | 20,000–30,000 | காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் |
| சுகாதாரம் | 25,000–40,000 | மருத்துவர்கள், செவிலியர்கள், ஆரம்ப சுகாதார மையம் |
| வருவாய் & நிர்வாகம் | 30,000–50,000 | கிராம நிர்வாக அலுவலர்கள், எழுத்தர்கள் |
| பிற துறைகள் | 1 லட்சத்திற்கு மேல் | போக்குவரத்து, பொதுப்பணித்துறை, சமூக நலத்துறை |



# 05. வேலைகள், திறன்கள் மற்றும் தொழில் முனைவு

அம்சம் 2, 3: • திறன் இயக்கம் • கிக் மற்றும் இணையதளத் தொழிலாளர்கள்

## அம்சம் 2 – மாவட்டத் திறன் இயக்கம்

மாநிலம் தழுவிய திறன் கணக்கெடுப்பு → உறுதியான வேலைவாய்ப்பு

- இளைஞர்களின் திறன் கணக்கெடுப்பு மாவட்டத் தொழிற்சாலைகளுடன் இணைக்கப்படும்
- திருப்பூர் → ஜவுளி • கோயம்புத்தூர் → பொருள் உற்பத்தித் துறை • சென்னை → தகவல் தொழில்நுட்பம் • டெல்டா → வேளாண்மை
- ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவை அடிப்படையிலான (பொதுவானதல்ல) பயிற்சியுடன் கூடிய திறன் மையங்கள்
- பெருநிறுவனங்கள் + எம்எஸ்எம்இ-க்கள் உடனான ஒப்பந்தங்கள் மூலம் உறுதியான வேலைவாய்ப்புகள்

## அம்சம் 3 – கிக் & இணையதளத் தொழிலாளர்கள்: உரிமைகள், பாதுகாப்பு & நலன்

அனைத்து கிக் மற்றும் இணையதளத் தொழிலாளர்களுக்கும் கீழ்க்காணும் உரிமைகள் அடிப்படையிலான சட்டம் இயற்றுதல்:

- நியாயமான ஒப்பந்தங்கள், வருவாய்ப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள்
- இணையதளப் பொறுப்புக்கூறலுடன் கூடிய குறைதீர்ப்பு நெறிமுறை
- சமூகப் பாதுகாப்பு, சுகாதாரக் காப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில், இணையதளங்களின் மூலம் பெறப்படும் நலத்திட்டக் கட்டணத்தின் மூலம் நிதியளிக்க கிக் மற்றும் இணையதளத் தொழிலாளர்கள் நலநிதியை நிறுவுதல்
- தமிழ்நாடு கிக் தொழிலாளர்கள் நல ஆணையம் அமைத்தல்

# 05. வேலைகள், திறன்கள் மற்றும் தொழில் முனைவு

அம்சம் 4, 5: • தொழில்துறை மையங்கள் • டிஜிட்டல் நூலகங்கள்

**அம்சம் 4—பொது—அரசு தொழில்துறை மையங்கள்**

பகிரப்பட்ட பொருள் உற்பத்தி உள்கட்டமைப்பு

- அரசால் கட்டப்பட்ட மையங்கள் — தொழில் முனைவோர் வாடகை இடம் மற்றும் உள்கட்டமைப்பு
- அதிக மூலதன முதலீடு இல்லாமல் ஒரு தொழிலைத் தொடங்குதல்
- துறைகள்: ஜவுளி, உணவு பதப்படுத்துதல், மருந்து, எந்திரவியல்
- எம்எஸ்எம்இ-க்கள், சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கிறது; நுழைவுத் தடைகளைக் குறைக்கிறது

**அம்சம் 5 – ஏசி டிஜிட்டல் நூலகங்கள் & பணி மையங்கள்**

- ஏசி இடங்கள்: அதிவேக வைஃபை + பணிநிலையங்கள் + அடையாள அட்டை அடிப்படையிலான அணுகல்
- மாணவர்கள், வேலை தேடுபவர்கள், வீட்டிலிருந்து பணிபுரியும் தொழில்முறையாளர்கள் மற்றும் தொலைதூர / கிக் பொருளாதாரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும்
- தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு டிஜிட்டல் நூலகம்



06

# பெண்கள் மற்றும் சிறுபான்மையினர், எஸ்சி / எஸ்டி மேம்பாடு

பிரிவு 06 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026

# 06. பெண்கள் மற்றும் சிறுபான்மையினர், எஸ்சி/எஸ்டி மேம்பாடு

அம்சங்கள் 1, 2 & 3: சொத்துரிமைகள் • பாலின வரவு செலவுத் திட்டம் • மாதவிடாய் சுகாதாரம்

## அம்சம் 1 – மகளிருக்கான சொத்துரிமைகள்

### பெண்களுக்கான அபிவிருத்தி

- முதல் முறையாக சொத்து வாங்கும் பெண்களுக்கு இலவச சொத்துப் பதிவு
- பெண்களின் பெயரில் சொத்துக்களைப் பதிவு செய்ய குடும்பங்களை ஊக்குவித்தல்
- நீண்ட கால சொத்துரிமை மூலம் நிதிப் பாதுகாப்பு
- தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள்

**பெண்கள் சொத்துரிமை பெறும்போது, குடும்பங்கள் அதிகப் பாதுகாப்பைப் பெறுகின்றன, குழந்தைகள் அதிக காலம் பள்ளியில் படிக்கின்றனர், தலைமுறை வறுமையும் குறைகிறது.**

## அம்சம் 2–பாலின வரவு செலவுத் திட்டம்

### கட்டாயமாகப் பாலின வரவு செலவுத் திட்டம்

- அரசின் ஒவ்வொரு துறையிலும் இது கட்டாயம்
- பெண்களை மையமாகக் கொண்ட திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அதன் விளைவுகளைக் கண்காணித்தல்
- பாலின அடிப்படையிலான செலவினங் களின் செயல்திறன் குறித்த வருடாந்தர பொது அறிக்கை
- தேர்தல் அறிக்கையில் உள்ள வாக்குறுதி களை மட்டும்மல்ல, உண்மையான நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்கிறது

**"எது திட்டமிடப்படுகிறதோ, அது கட்டாயம் செயல்படுத்தப்படும்"**

**— பெண்களுக்கான ஒவ்வொரு ரூபாயின் செலவும் கண்காணிக்கப்படும்**

## அம்சம் 3 – மாதவிடாய் சுகாதாரம் & கண்ணியம்

### சுகாதாரம், கண்ணியம் மற்றும் பங்கேற்பு

- அனைத்து அம்மா உணவகம் மற்றும் மக்கள் நல மையங்களில் கட்டணமின்றி / மலிவு விலையில் சுகாதாரப் பொருட்கள்
- பெண்களுக்கு அனைத்துப் பொது இடங்களிலும் சுத்தமான, செயல்படும் கழிப்பறைகள்
- பணியிடம் மற்றும் பள்ளிகளில் சுகாதாரத் தரகட்டுப்பாடு அமல்படுத்தப்படும்
- பள்ளி அளவில் விழிப்புணர்வு மற்றும் மாதவிடாய் சுகாதாரக் கல்வி
- சமூகப் பிரச்சாரங்கள் மூலம் தவறான புரிதல்களை நீக்குதல்





அம்சங்கள் 4 & 5: • சிறுபான்மையினருக்கு அதிகாரமளிக்கும் இயக்கம் • குழந்தைத் திருமணங்களை முற்றாகக் களைதல்

## அம்சம் 4 – சிறுபான்மையினருக்கு அதிகாரமளிக்கும் இயக்கம்

### ஒவ்வொரு சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

- சிறுபான்மைத் தொழில்முனைவோர், கைவினைஞர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியக் கடன்கள் மற்றும் நுண்-கடன் வசதி
- மதம் சார்ந்த சொத்துக்களுக்கு வெளிப்படையான டிஜிட்டல் மேலாண்மை – வருவாய்கள் பிரத்தியேகமாக சமூக நலன், கல்வி மற்றும் சுகாதாரத்திற்குத் திருப்பப்படும்

**தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் சிறுபான்மையினர் ஏறத்தாழ 20% உள்ளனர். கல்வி, பொருளாதார உள்ளடக்கம், சட்டப் பாதுகாப்பு ஆகியவற்றில் இலக்கு நிர்ணயித்து முதலீடு செய்வதன் மூலம், மாநிலத்தின் வளர்ச்சிப் பயணத்தில் எந்தவொரு சமூகமும் பின்தங்காமல் இருப்பதை உறுதிசெய்ய முடியும்.**

## அம்சம் 5 – குழந்தைத் திருமணங்களை முற்றாகக் களைவதற்கான இயக்கம்

### 2030-க்குள் முற்றிலுமாகக் களைதல்

**பிரச்சனை**

**~12–15% பெண்கள் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்துகொள்கிறார்கள் (தேசிய குடும்ப சுகாதார ஆய்வு). கிராமப்புறங்களிலும், பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினரிடையேயும் இது அதிகமாகக் காணப்படுகிறது. காரணங்கள்: பள்ளி இடைநிற்றல், இளம் வயதில் கருவுறுதல், தொடர் வறுமை.**

**தீர்வு**

- குழந்தை திருமணத் தடுப்புச் சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்துதல்
- 18 + வயது வரை பெண் குழந்தைகளின் கல்விக்கு ஊக்கமளித்தல்
- கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள்
- உள்ளூர் தலைவர்களுடன் இணைந்து சமூக விழிப்புணர்வு

# நகர்ப்புற மேம்பாடு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள்

பிரிவு 07 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026



# 07. நகர்ப்புற மேம்பாடு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள்

அம்சங்கள் 1, 2 & 3: 24 × 7 தண்ணீர் வசதி • குறைந்த விலையில் வீடுகள் • விரைவாக நிலப்பட்டா

### அம்சம் 1 – 24×7 தூய்மையான குடிநீர்

24 மணி நேரமும் பாதுகாப்பான குடிநீர்

- அனைத்து முக்கிய நகரங்களிலும் 24×7 பாதுகாப்பான குடிநீரை உறுதி செய்தல்
- பழைய குழாய்களை மாற்றி, நீர்க் கசிவுகளைக் குறைத்தல்
- ஐஓடி (IoT) சென்சார்களுடன் கூடிய நவீன நீர் மேலாண்மை அமைப்புகள்
- ஒவ்வொரு வார்டு நிலையிலும் நீரின் தரத்தைக் கண்காணித்தல்
- அனைத்து நகர்ப்புற வீடுகளுக்கும் நம்பகமான விநியோகம்

### அம்சம் 2–குறைந்த விலையில் வீடுகள்

அனைவருக்கும் வீட்டுவசதி — நகர்ப்புற ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு

- தனியார்துறை பங்கேற்புடன் குறைந்த விலையிலான வீட்டுவசதிக்குப் புதிய கொள்கை
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தை (TNHB) வலுப்படுத்துதல்—5 ஆண்டுகளில் குறைந்த விலையில் 2 லட்சம் வீடுகள்
- நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தைப் புனரமைத்தல்—குடிசைப்பகுதி மறுவாழ்வு, வாடகை வீடுகள், குடியிருப்புப் பராமரிப்பு
- நகர்ப்புற ஏழைகள், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (EWS) மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர் (LIG) மீது கவனம்
- கட்டுமான செலவுச் சுமையைக் குறைக்க கட்டப்பட்ட வீடுகள் விநியோகத்தை அதிகரித்தல்

### அம்சம் 3 – விரைவான நிலப்பட்டா சீர்திருத்தம்

நில உரிமைகள் பாதுகாப்பு - விரைவாக

- விரைந்து பட்டா வழங்க லோக் அதாலத்துகள் — பல ஆண்டுகள் காத்திருக்கத் தேவையில்லை
- அனைத்து நிலப் பதிவேடுகளையும் மறுஆய்வு செய்து மறுவரையறை செய்தல்
- நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தீர்த்தல்: பழைய நீர்நிலைகள், சர்ச்சைக்குரிய பட்டாக்கள்
- கிராமப்புற மற்றும் பழங்குடியினர் நில உரிமைகளுக்கென தனியாகப் பணிக்குழு
- நில உரிமையைப் பாதுகாத்தல் → நீதிமன்ற வழக்குகளைக் குறைத்தல்

# 07. நகர்ப்புற மேம்பாடு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள்

அம்சங்கள் 4 & 5: டிஜிட்டல் நிலப்பதிவகம் • சொத்து மதிப்பீட்டு சீர்திருத்தம்

### அம்சம் 4 – ஒருங்கிணைந்த டிஜிட்டல் நிலப்பதிவகம்

**ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் திருத்த முடியாத டிஜிட்டல் பதிவு**

- அனைத்து நிலப் பதிவுகளையும் ஒருங்கிணைத்தல்: பதிவு + வருவாய் + நில அளவை மற்றும் தீர்வு
- முழுமையான டிஜிட்டல், பிளாக்செயின் ஆதரவுள்ள திருத்த முடியாத அமைப்பு
- குடிமக்கள், வழக்கறிஞர்கள் மற்றும் வங்கிகளுக்கான ஒற்றைச் சாளர வசதி
- எந்தவொரு பரிவர்த்தனை அல்லது மாற்றத்திற்கும் நிகழ்நேர நிலை புதுப்பிப்புகள்
- விளைவு: மோசடி குறைதல், வேகமான பரிவர்த்தனைகள், குறைவான நீதிமன்ற வழக்குகள்
- நிலத்திற்கான உரிமைப்பத்திரக் காப்பீடு: தெளிவான உரிமையை உறுதிப்படுத்தவும், நிலத் தகராறுகள் மற்றும் மோசடிகளிலிருந்து வாங்குபவர்களைப் பாதுகாக்கவும், உரிமைப் பத்திரம் தொடர்பான இழப்புகளுக்கு இழப்பீடு வழங்கவும் அரசு ஆதரவிலான உரிமைப் பத்திரக் காப்பீட்டு முறையை அறிமுகம் செய்தல்

**தமிழ்நாட்டில் தற்போதுள்ள சிவில் நீதிமன்ற வழக்குகளில் 60%+ நிலத் தகராறுகள் தொடர்பானவை. ஒருங்கிணைந்த டிஜிட்டல் பதிவகம் என்பது, நீதிமன்றங்கள் மற்றும் குடிமக்கள் மீதான இந்தச் சுமையைப் பெருமளவில் குறைக்கும்.**

### அம்சம் 5 – சொத்து மதிப்பீட்டுச் சீர்திருத்தம்

**வெளிப்படையான, நியாயமான சொத்துப் பரிவர்த்தனைகள்**

- வழிகாட்டு மதிப்புக்கும் சந்தை மதிப்புக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்தல்
- முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களை முறைப்படுத்துதல்
- வெளிப்படையான, டிஜிட்டல் சொத்துப் பரிவர்த்தனைகளை உறுதி செய்தல்
- ரியல் எஸ்டேட்டில் உள்ள கறுப்புப் பணத்தைக் குறைத்தல்
- இணக்கத்தை அதிகரித்தல், ரியல் எஸ்டேட் செயல்பாடுகளை ஊக்குவித்தல்



08

# போக்குவரத்து, எளிதாக இயங்கும் தன்மை மற்றும் சரக்குப் போக்குவரத்து

பிரிவு 08 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026

# 08. போக்குவரத்து, எளிதாக இயங்கும் தன்மை மற்றும் சரக்குப் போக்குவரத்து

அம்சங்கள் 1, 2 & 3: • சாலைகள் மற்றும் திறன்மிகு போக்குவரத்து • ஆட்டோ ரிக்ஷா மீட்டர் பொருத்துதல் • பசுமைப் பொதுப் போக்குவரத்து

### அம்சம் 1–உலகத் தரத்திலான சாலைகள் மற்றும் திறன்மிகு போக்குவரத்து

**தமிழ்நாட்டில் குண்டும் குழியுமற்ற சாலைகள் + செயற்கை நுண்ணறிவு மூலம் போக்குவரத்துக் கட்டுப்பாடு**

- கடுமையான தர அமலாக்கத்துடன் செயல் திறன் அடிப்படையிலான சாலை ஒப்பந்தங்கள்
- ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் மூன்றாம் தரப்பு தணிக்கைகள் + தவறும் ஒப்பந்ததாரர் களைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்தல்
- மக்கள் குறைதீர்ப்புத் தளம்: சாலைப் புகார் களுக்கு 48 மணி நேரத்திற்குள் பதில்
- செயற்கை நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை: கேமராக்கள், ட்ரோன்கள், நிகழ்நேர கண்காணிப்பு - தானியங்கி விதிமீறல் அபராதங்கள் (மனிதத் தலையீடும் ஊழலும் இல்லாமை)
- அனைத்து முக்கிய நகரங்களிலும் மத்திய கட்டுப்பாட்டு மையம்
- போக்குவரத்துக்குப் பேருதவியாக சென்சார்கள் மற்றும் ஒத்திசைவான சிக்னல்களுடன் திறன்மிகு சாலைகள்

### அம்சம் 2–ஆட்டோ ரிக்ஷா மீட்டர் பொருத்துதல்

**கட்டணத்திற்கு பேரம் பேசுவதை முடிவுக்குக் கொண்டுவருதல் — நேர்மையான மீட்டர்கள், நியாயமான கட்டணங்கள்**

- அனைத்து ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் ஜிபிஎஸ் வசதியுடன் டிஜிட்டல் மீட்டர்கள் கட்டாயம்
- மீட்டர் இல்லாமல் ஓட்டுவது சட்டவிரோத செயல்பாடாகும்
- கடுமையான தண்டனைகள்: ரூ. 5,000 அபராதம் + 1 வாரத்திற்கு உரிமம் முடக்கம் (முதல் முறை தவறுக்கு), ரூ. 25,000 அபராதம் + நிரந்தரமாக உரிமம் ரத்து (மீண்டும் மீண்டும் தவறு செய்தால்)
- நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட செயலிகள் (நம்ம யாத்ரி, ஊபர் ஆட்டோ, ஓலா ஆட்டோ) குறைவாக வசூலிக்கக் கூடாது
- மக்கள் புகார் தளம் — புகைப்படம் / வீடியோவைப் பதிவேற்றத்திற்கு, 48 மணி நேரத்திற்குள் நடவடிக்கை

### அம்சம் 3–பசுமைப் பொதுப் போக்குவரத்து

**5,000 புதிய பேருந்துகள் + பசுமைப் போக்குவரத்து**

- நகர்ப்புறங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் 5,000 புதிய பேருந்துகளை (மின்சார / சூரிய சக்தி) அறிமுகம் செய்தல்
- அனைத்து முக்கிய நகரங்களிலும் மின்சாரப் பேருந்துகள் மற்றும் மின்-சைக்கிள்களை ஊக்குவித்தல்
- மெட்ரோ மற்றும் ரயில் மையங்களுக்கான இறுதிநிலை இணைப்பை மேம்படுத்துதல்
- விளக்குகள் மற்றும் சிசிடிவி வசதியுடன் பெண்களுக்கு உகந்த பேருந்து நிறுத்தங்கள்
- அனைத்துப் போக்குவரத்து முறைகளுக்கும் ஒருங்கிணைந்த பயணச்சீட்டு முறை



# 08. போக்குவரத்து, எளிதாக இயங்கும் தன்மை மற்றும் சரக்குப் போக்குவரத்து

அம்சங்கள் 4 & 5: சாலைப் பாதுகாப்பு • துறைமுகம் மற்றும் சரக்குப் போக்குவரத்து உள்கட்டமைப்பு

### அம்சம் 4 – சாலைப் பாதுகாப்பு மற்றும் ஓட்டுநர் பொறுப்பேற்றல்

**தமிழ்நாட்டின் சாலைகளில் உயிர்களைப் பாதுகாத்தல்**

**விபத்து அபாயப்பகுதி நடவடிக்கை**

விபத்து அதிகம் ஏற்படும் பகுதிகளில் கவனம் கூடுதலாகக் காவல்துறை சோதனைச் சாவடிகள்

இலக்குடனான கண்காணிப்பு & சிசிடிவியுடனான சாலை வடிவமைப்பு மேம்பாடுகள்

**ஓட்டுநர் சீர்திருத்த நடவடிக்கைகள்**

உரிமம் பெறுவதற்கு முன் கட்டாய ஓட்டுநர் பயிற்சி

அனைத்து ஓட்டுநர்களுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் கண் பரிசோதனை

விதிமீறல் செய்பவர்களுக்கு / விபத்துக்குள்ளாகுபவர்களுக்கு மறு சான்றிதழ் வழங்குதல்

அனைத்து ஓட்டுநர்களுக்கும் திடீரென போதைப்பொருள் மற்றும் மதுபானப் பரிசோதனை

**பாதுகாப்பான ஓட்டுநர்களுக்குப் பரிசு**

**விதிமீறல் இல்லாத ஆவணத்திற்கு சாலை வரி மற்றும் பிற சலுகைகள்**
**2 ஆண்டு காலம் விதிமீறல்கள் இல்லையென்றால்**
**→ ரூ. 500 ரொக்கப் பரிசு + ஆண்டின் "பாதுகாப்பான ஓட்டுநர்" விருதுகள்**

**தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ~15,000-க்கும் அதிகமான சாலை மரணங்கள் பதிவாகின்றன. கடுமையான சட்ட அமலாக்கம் + ஓட்டுநர் சீர்திருத்தம் மூலம் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும்.**

### அம்சம் 5–துறைமுகம் மற்றும் சரக்குப் போக்குவரத்து உள்கட்டமைப்பு

**கடலோர மற்றும் துறைமுக உள்கட்டமைப்பு மேம்பாடு**

- துறைமுக உள்கட்டமைப்பு மற்றும் பிற கடலோர மையங்களை மேம்படுத்துதல்
- வர்த்தகம், மீன்பிடித்தல் மற்றும் சுற்றுலாவுக்கான சிறந்த இணைப்பு வசதி
- தொழில் தொகுப்புகளுக்கு அருகே பலவகை போக்குவரத்து வசதிகள்
- ஐஸ்கட்டி தொழிற்சாலைகள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகளுடன் நவீன மீன்பிடித் துறைமுகங்கள்
- உள்நாட்டு மீன்பிடித் தொழிலை மேம்படுத்துதல்

# சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி

பிரிவு 09 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026



# 09. சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி

அம்சங்கள் 1, 2 & 3: காவலர் ஆட்சேர்ப்பு • சைபர் குற்றம் • ஒருங்கிணைந்த அவசரகால நடவடிக்கை (100)

### அம்சம் 1—காவல்துறையை பலப்படுத்துதல் மற்றும் பெண்கள் பாதுகாப்பு

**40,000 புதிய காவலர்கள் நியமனம்**

- உலகத் தரத்தை எட்டுவதற்காக 40,000 காவலர்கள் நியமனம்
- தொடர்ச்சியான ரோந்துப் பணிகள் மூலம் காவல் பணியின் வெளிப்படையான கண்காணிப்பு அதிகரிக்கப்படும்
- குற்றங்களைத் தடுக்க பதற்றமான பகுதிகளில் கொடி அணிவகுப்புகள்
- 10,000-க்கும் அதிகமான பெண் காவல் கமாண்டோக்கள் பின்வரும் இடங்களில் பணியமர்த்தப்படுவர்:
  - பொதுப் போக்குவரத்து (பேருந்துகள், மெட்ரோ, ரயில் நிலையங்கள்)
  - அதிக ஆபத்துக்கான பகுதிகள் (சந்தைகள், பேருந்து நிலையங்கள், கல்லூரிகள்)
  - நகர்ப்பகுதிகளில் இரவு ரோந்துப் பணிகள்
- பெண்களுக்கு எதிரான அனைத்துக் குற்றங்கள் மீதும் விரைவான விசாரணை

### அம்சம் 2 — சைபர் குற்றம் மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாடு

**டிஜிட்டல் குற்றம் + போதைப் பொருள் கடத்தல் — சகிப்புத் தன்மையற்ற அணுகுமுறை**

**சைபர் குற்றம்:**

- அனைத்து மாவட்டங்களிலும் சைபர் குற்றக் கண்காணிப்பு நிலையங்கள்
- செயற்கைநுண்ணறிவு கண்காணிப்பு, நிகழ் நேரக் கண்காணிப்பு, நிதி மோசடிப் பிரிவு
- டிஜிட்டல் பாதுகாப்பு குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

**போதைப்பொருள் கட்டுப்பாடு:**

- போதைப் பொருள் தடுப்புப் பிரிவு— தயாரிப்போர், விநியோகிப்போர், விற்போரைக் குறிவைத்தல்
- சட்டவிரோத போதைப்பொருள் ஆய்வகங்களில் சோதனை, இரசாயன மூலப்பொருட்களைக் கண்காணித்தல்
- எல்லைப்பகுதி மற்றும் கடலோரக் கண்காணிப்பு

### அம்சம் 3 — ஒருங்கிணைந்த அவசரகால நடவடிக்கை (100)

**ஒரே எண். அனைத்து அவசர நிலைகளுக்கும். உடனடி பதில்**

- ஒரே அவசரகால எண்: 100 அமெரிக்காவின் 911 மாதிரியை அடிப்படையாகக் கொண்டது (100 / 101 / 108 / 1091 ஆகியவற்றை ஒருங்கிணைத்தது)
- ஜிபிஎஸ் வசதியுடன் தானியங்கி இருப்பிடக் கண்காணிப்பு - அருகிலுள்ள காவல்துறை / தீயணைப்பு / ஆம்புலன்ஸ் 60 வினாடிகளுக்குள் அனுப்பப்படும்
- “TN 100” மொபைல் செயலி - பாதுகாப் பற்ற சூழ்நிலைகளில் ஆபத்து குறித்து அமைதியான எச்சரிக்கை
- உலகத் தரத்தில் குறைதீர்ப்பு அழைப்பு மையம்
  - போதிய பெண் பிரதிநிதித்துவத்துடன் பயிற்சி பெற்ற 5,000 + பணியாளர்கள்
  - நேரடி நபர் ஆதரவு
  - கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் கட்டளை அறைகள் – 24x7 கண்காணிப்பு

# 09. சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி

அம்சங்கள் 4 & 5: காவல்துறை சீர்திருத்தங்கள் • நீதித்துறை சீர்திருத்தங்கள் மற்றும் எளிதாக நீதி பெறுதல்

## அம்சம் 4–காவல்துறை சீர்திருத்தங்கள் & வெளிப்படைத்தன்மை

நவீன, பதில்கூறும் பொறுப்புள்ள மற்றும் மனிதாபிமான காவல் படை

### வெளிப்படைத்தன்மைக்கான நடவடிக்கைகள்

அனைத்துக் காவல் நிலையங்களிலும் சிசிடிவி கேமராக்கள்

ஒவ்வொரு புகாருக்கும் மின்னணு ரசீதுகள்

முதல் தகவல் அறிக்கை நிலை அறிய குடிமக்களுக்கான இணையவழி கண்காணிப்பு

பொதுப் புகார் தளம் (24×7)

சுதந்திரமான மேற்பார்வைக் குழு

### உள்ளக சீர்திருத்தங்கள்

காவலர்களுக்கான உளவியல் ஆலோசனை

கட்டாய விடுப்புகள்

மன அழுத்த மேலாண்மைத் திட்டங்கள்

மென்திறன்கள் மற்றும் ஒத்துணர்வுப் பயிற்சி

தொழில்நுட்பம் மற்றும் சாட்சிய சட்டப் பயிற்சி

செயல்திறனுடன் இணைந்த பதவி உயர்வுகள்

**இலக்கு: குடிமக்கள் நம்புகின்ற, மதிக்கின்ற, அஞ்சாமையுள்ள ஒரு காவல் படை**

## அம்சம் 5 – நீதித்துறை சீர்திருத்தங்கள் மற்றும் எளிதாக நீதி பெறுதல்

### அனைவருக்கும் விரைவான நீதி

- தேங்கிக் கிடக்கும் வழக்குகளைக் குறைக்க அனைத்து நீதித்துறை காலிப் பணியிடங்களையும் நிரப்புதல்
- வழக்குகளை விரைந்து முடிக்க மாலை நேர நீதிமன்றங்களை அறிமுகம் செய்தல்
- நெரிசல் மிகுந்த சிறைகளில் நெரிசலைக் குறைக்க, வன்முறை தவிர்த்த குற்றங்களுக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளைக்கொண்டு ஜாமீன் அதாலத் நடத்துதல்
- ஏழை மற்றும் விசாரணைக் கைதிகளுக்கு சட்ட உதவி
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தனியாக விரைவு நீதிமன்றங்கள்



# 10

# சுற்றுச்சூழல், எரிசக்தி மற்றும் சுற்றுலா

பிரிவு 10 • 5 விரிவான வாக்குறுதிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் • தமிழ்நாடு 2026

# 10. சுற்றுச்சூழல், எரிசக்தி மற்றும் சுற்றுலா

அம்சங்கள் 1, 2 & 3: கடலோரப் பாதுகாப்பு • மீனவர்கள் • கோயில் குளங்கள்

### அம்சம் 1–கடலோரப் பாதுகாப்பு இயக்கம்

**தமிழ்நாட்டின் 1,076 கி.மீ. கடற்கரையைப் பாதுகாத்தல்**

- பாதிக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் பெருமளவில் கடற்கரை அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்
- அறிவியல் பூர்வமான தீர்வுகள்: கடல் சுவர்கள், தடுப்பணைகள் மற்றும் கடற்கரைக்கு ஊட்டமளித்தல்
- மீனவ கிராமங்கள் மற்றும் கடலோர வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்
- அனைத்து 13 கடலோர மாவட்டங்களுக்கும் கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்கள்
- கடலோர சமூகத்தினரை இடமாற்றம் செய்ய காலநிலை மீட்சி நிதி

### அம்சம் 2 – மீனவர்கள் பாதுகாப்பு மற்றும் நீலப் பொருளாதாரம்

**கடலில் பாதுகாப்பு + நீலப் பொருளாதார வளர்ச்சி**

- ஆபத்தில் உள்ள மீனவர்களுக்கான கடல் ஆம்புலன்ஸ் மற்றும் அவசரகால மீட்பு அமைப்பு
- கடலோரப் பகுதிகளில் வான்வழி ஆம்புலன்ஸ் உதவி பற்றி ஆராய்தல்
- உயர் மதிப்பு சுற்றுலாவிற்கான நீலக் கொடி சான்றளிக்கப்பட்ட கடற்கரைகள்
- தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோர மையங்களில் கடல் விமான இணைப்புக்கான சாத்தியக்கூறு ஆய்வு
- மீனவர்கள் நல நிதி மற்றும் உபகரண மானியங்கள்

### அம்சம் 3 – கோயில் குளங்கள் மறுசீரமைப்பு

**2,000-க்கும் அதிகமான கோயில் குளங்களை சீரமைத்தல்**

- தமிழகம் முழுவதும் உள்ள கோயில் குளங்களை சீரமைத்து பொலிவுறச் செய்தல்
- நீர் சேமிப்புத் திறனையும் நிலத்தடி நீர் செறிவூட்டலையும் மேம்படுத்துதல்
- சமயச் சுற்றுலாவுடன் இணைந்த பாரம்பரியப் பாதுகாப்பு
- வண்டல் அகற்றுதலையும் தூய்மையாக்குதலையும் வழக்கமான வருடாந்தரத் திட்டமாகச் செயல்படுத்துதல்
- உள்ளூர் கோயில் குழுக்கள் மூலம் சமூகத்தை ஈடுபடுத்துதல்



# 10. சுற்றுச்சூழல், எரிசக்தி மற்றும் சுற்றுலா

அம்சங்கள் 4 & 5: சமயச் சுற்றுலா • தமிழ்நாடு மின்சார வாரிய சீர்திருத்தம் & எரிசக்தி திறன்

### அம்சம் 4 – சமய மற்றும் கலாச்சார சுற்றுலா

**தமிழ்நாட்டை இந்தியாவின் #1 (முதன்மை) ஆன்மீக சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்**

- அனைத்து முக்கியத் தலங்களிலும் சமயச் சுற்றுலாவுக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்
- திருவிழா சுற்றுலா: பொங்கல் பண்டிகை, கார்த்திகை தீபம், சித்திரை திருவிழா, சந்தனக்கூடு ஆகியவற்றை தேசிய விழாக்களாக நிலைநிறுத்துதல்
- தமிழ்நாட்டை உலகளாவிய ஆன்மீக சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதல்
- இணையவழி முன்பதிவு, பன்மொழி வழிகாட்டிகள், அனைத்து முக்கியக் கோயில்களிலும் தூய்மையான வசதிகள்
- கோயில், உணவு, கைவினைப்பொருட்கள் மற்றும் இயற்கைச் சுற்றுலாவை ஒருங்கிணைக்கும் பாரம்பரிய கிராமப்புறச் சுற்றுப்பயணங்கள்

**தமிழ்நாட்டில் 40,000-க்கும் அதிகமான கோயில்கள் உள்ளன — இதுவே உலகில் அதிக எண்ணிக்கையில் கோயில்களைக்கொண்ட மாநிலமாகும். சமயச் சுற்றுலாவை மேம்படுத்துவதன் மூலம் ஆண்டு வருவாயாக ரூ. 50,000 கோடிக்கு மேல் ஈட்டவும், லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் முடியும்.**

**எங்கள் இலக்கு (2030) - 1 கோடி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்**

**ரூ. 50,000 கோடிக்கும் அதிகமான வருவாய்**

### அம்சம் 5–தமிழ்நாடு மின்சார வாரிய சீர்திருத்தம் & எரிசக்தி திறன்

**நுகர்வோருக்கு உகந்தது. திறமையான உற்பத்தி. மின்வெட்டு இல்லாமை**

- வெளிப்படையான கட்டண முறையுடன் நுகர்வோருக்கு முன்னுரிமை அளிக்கும் சீர்திருத்தங்கள்
- கட்டணம் செலுத்த இடையூறு இல்லாமை - முறைகேடான ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை
- மின் உற்பத்தியை நவீனமாக்குதல் - பழமையான அனல் மின் நிலையங்களை மாற்றுதல்
- மின் நிலையங்களில் நிலக்கரிக்கு மாற்றாக உயிரி எரிபொருள் போன்ற மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்துதல்
- அனைத்து முக்கிய நகரங்களிலும் கழிவுப் பொருளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைத்தல்
- மின்சாரம் கொண்டு செல்லும் வழித்தடங்களை மேம்படுத்துவதன் மூலம் மின்சாரம் கொண்டு செல்வதிலும் விநியோகத்திலும் இழப்புகளைக் குறைத்தல்
- சீரான மின் விநியோகத்தை உறுதி செய்தல் - அனைவருக்கும் 24×7 தடையற்ற மின்சாரம்
- புதியவகை நிதி திரட்டல் மூலம் ரூ. 2 லட்சம் கோடி கடன் சுமையைக் குறைத்தல்

## தேர்தல் அறிக்கை குழு

**திரு. கார்த்தி ப சிதம்பரம், எம்.பி. - தலைவர்**
**திரு. எஸ். ராஜகுமார், எம்.எல்.ஏ.** - துணைத் தலைவர்

## நிரந்தர அழைப்பாளர்கள்

**திரு. கு. செல்வப்பெருந்தகை, எம்.எல்.ஏ.**
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**திரு. செ. ராஜேஷ்குமார், எம்.எல்.ஏ.**
தலைவர், சட்டமன்ற காங்கிரஸ் கட்சி

**திரு. கிரிஷ் சோடங்கர், திரு. சூரஜ் எம்.என். ஹெக்டே, திரு. நிவேதித் ஆல்வா**
(அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, பொறுப்பாளர்)

செல்வி. எஸ்.ஜோதிமணி, எம்.பி
திரு. விஜய் வசந்த், எம்.பி
திரு. சசிகாந்த் செந்தில், எம்.பி
திரு. ஆ.கோபண்ணா
திரு. ஏ.பி.சி.வி. சண்முகம்
திரு. ஆர். இராம சுகந்தன்
திருமதி. இமயா கக்கன்
திரு. எஸ்.எம். இதாயத்துல்லா
திரு. ஆனந்த் சீனிவாசன்
டாக்டர் ஆர். மாணிக்கவாசகம்
டாக்டர் கே. ஜெயக்குமார்
திரு. ஆர். மோகன் குமாரமங்கலம்
திரு. ஏ.எம்.எஸ்.ஜி. அசோகன், எம்.எல்.ஏ
திருமதி. லட்சுமி ராமச்சந்திரன்
திரு. ஆர்.எம். பழனிச்சாமி
செல்வி. துஹினா சந்திரசேகர்
டாக்டர் ஆர்.எல்.கண்ணன்
திரு. குப்புசாமி
திரு. பி.எஸ். ஜெய்கணேஷ்
செல்வி. மரகதம் தங்கவேலு
திரு. அந்தோணி எஸ்.வி. விஜிலியஸ்
திரு. பி. செல்வகுமார்
திரு. சஞ்சய் காந்தி
டாக்டர் தம்பி விஜயகுமார்
திருமதி. சங்கீதா சுந்தரம்

திரு. கே.பி. சூர்யா பிரகாஷ், திருமதி. ஹசீனா சையத், திரு. குங்ஃபூ எஸ்.எக்ஸ். விஜயன், திரு. மா. சின்ன தம்பி
நன்றி : திரு. ஆர். அக்ஷய குமார், திரு. எஸ். செந்தில்



# நாம் ஒன்றிணைந்து நாளைய தமிழ்நாட்டை உருவாக்குவோம்

**10** பிரிவுகள்

**50** வாக்குறுதிகள்

**1** தொலைநோக்கு

**முன்னேற்றத்திற்கு வாக்களியுங்கள் • தமிழ்நாட்டிற்கு வாக்களியுங்கள் • காங்கிரசுக்கு வாக்களியுங்கள்**

ஜெய் ஹிந்த் • வந்தே மாதரம் • வணக்கம் தமிழ்நாடு